TNTAM / 2013 / 53818

# மகளிர் உரிமை

பொறுப்பும் பொறுமையும் வாய்ந்தவள்

# MAGALIR URIMAI

மலர் : 11 இதழ் : 3 விலை : 10/- மார்ச் : 2024
Vol. : 11 Issue : 3 Price : 10/- March : 2024



## தெலுங்கானா ஆளுனர்
## புதுச்சேரி துணை நிலை ஆளுனர்
## திருமதி.தமிழிசை சௌந்தரராஜ் அவர்கள்
## மகளிர் தின வாழ்த்துக்கள் தெரிவித்தார்

# SME
# திருமண தகவல் மையம்

UDYAM - TN - 28 - 0062198





## அனைத்து சமுதாய வரன் பார்த்து தரப்படும்

தொடர்புக்கு :

**83443 99714, 97877 63180**

எண்.7, கம்பர் வீதி, ஊத்துக்குளி ஆர்.எஸ்.
திருப்பூர் – 638 752

டச்சு மொபைல் இருந்தால் போதும்
ரூ.5 ரூபாயிலிருந்து ரூ.1800 ரூபாய்
வரைக்கும் வருமானம் பெறலாம்

**83443 99714**



## SME புரமோட்டர்ஸ்

இடம் வாங்க விற்க ஹவுசிங் லோன்
அனைத்து வசதிகளும் செய்து தரப்படும்.

**94898 00188**

TNTAM / 2013 / 53818

# மகளிர் உரிமை

MAGALIR URIMAI

| மலர் : 8 | இதழ் : 2 | விலை : 10/– | மார்ச் : 2024 |
| --- | --- | --- | --- |
| Vol. : 6 | Issue : 2 | Price : 10/- | March : 2024 |


வெளியிடுபவர் :

**T.K.அசோக்குமார்**

Email ID : Magalirurimai@gmail.com

இணை ஆசிரியர் :

திருமதி. **பிரேமாவதி அசோக்குமார்**

**D.கிறிஸ்துராஜ்**

**ஜீவமாணிக்கம்**

மக்கள் தொடர்பு

**A.ஜெப அருள் ராஜ்**

**A.ஜான் கார்னல் சிங்**

சட்ட அலோசகர் :

**T.K.அசோக்குமார்** B.A., B.L.,
196, LAW CHAMBER,
High Court, Chennai - 104
**94442 59059**

மாவட்ட வாரியான நிருபர்கள்

**J.பொன்னுராஜம்**

**S.வின்சென்ட் விஜயகுமார்**

**R.ஆதிமூலம்**

**J.ஜானகிராமன்**

**C.கணபதி**

**D.பிரசன்னா**

**V.மனோஜ்குமார்**

**B.சௌகத்அலி பாபு**

**செந்தில்குமார் மாணிக்கம்**

**C.சித்திரவேலு**

**R.சரவணன்**

**A.பாலாஜி**

**D.பிரகாஷ்**

இதழ் வடிவமைப்பு

**சந்துரு எம்**

## தலையங்கம்

அன்பார்ந்த வாசகர்களுக்கு,

மகளிர் உரிமை மாத இதழ் சார்பாக மார்ச் 8–ஆம் தேதி உலக மகளிர் தினத்தை முன்னிட்டு இந்த இதழ் அனைத்து மகளிருக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

மகளிர் அனைத்து துறைகளிலும் ஆண்களுக்கு நிகராக அனைத்துப் பொறுப்புகளிலும் செய்து வரும் இக்கால கட்டத்தில் பெண்களுக்கு சுய தொழில் மற்றும் தங்களுடைய சொந்த படைப்புக்கள், விளையாட்டுத்துறை, கல்வித்துறை மற்றும் காவல் துறை அரசு உயர் பதவிகளில் இருக்கும் எண்ணற்ற மகளிர் சகோதரிகள் தங்களுடைய கருத்துக்களையும், அனுபவங்களையும் அறிவுரைகளையும் இந்த இதழின் வாயிலாக தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி பல்வேறு மகளிர் சகோதரிகளுக்கு வாழ்வியல் முன்னேற்றம் குறித்த செய்திகளை வழங்குமாறுஉங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

– இணை ஆசிரியர்
திருமதி. **பிரேமாவதி அசோக்குமார்**

**Magalir Urimai**
No.49, Sivanthi Avenue 1st Cross Street,
Nerkundram, Chennai - 600 107.
Cell : 9444259059, 7200001414
Email : magalirurimai@gmail.com
web : www.magalirurimai.com

Owned, Published & Printed by Premavathy Ashokumar, Printed at New Karthik Printers, No.26A, 2nd Street, Bharatheeswarar Colony, Kodambakkam, Chennai - 600 024. and Published from D.No.13/1, Dhayasadan Road, Koyambedu, Chennai-600 107, Editor : Mr. Tamil Selvan



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையில் உதவி பொறியாளராக நேரடி நியமனம் செய்யப்பட்டுள்ள 8 நபர்களுக்கு மாவட்ட ஆட்சியர் கி.சாந்தி தர்மபுரி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அளவில் உதவி பொறியாளர் (ஊ.வ.) நிலையில் பணி ஒதுக்கீடு ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) வேடியப்பன் உள்ளார்.

---

# மகளிர் தினம்

அன்பால் அரவணைக்கும்
அன்னை அவள்
தமையனுக்காய் தவிக்கும் தங்கை
அவள் மனதால் மயக்கும் மனைவி
அவள் கண்களால் கவரும் காதலி
அவள் குசும்பு செய்யும் குட்டி மகள்
அவள் என்று நமது வாழ்க்கையின்
அனைத்து ரூபத்திலும்
நம்முடன் இருப்பவள்
பெண்கள் அப்படிப்பட்ட
பெண்களுக்கு
மகளிர் தினம் வாழ்த்துக்கள் ...

**இனிய மகளிர் தின வாழ்த்துக்கள்**





பெண்ணாய் பிறந்ததற்கு பெருமை கொள்வோம் ! வீரத்தில் வேலுநாச்சியார் ஆகவும், கண்கள் அன்னை தெரேசாவாகவும், வேகத்தில் விஷேசமாக இருந்தாலும், நீ ஒரு சிங்க பெண்ணாகவும், கோபத்தில் கண்ணகி ஆகவும், தாயாய் இருக்கும் போது விண்ணை தொடும் அளவிற்கு பெண்ணாக புகழ் பெறுகிறது இந்த மண்..

மேதகு தெலுங்கானா ஆளுநர் & புதுவை மாநில துணை நிலை ஆளுநர்
திருமதி. **தமிழிசை சௌந்தர்ராஜன்** அவர்கள் மகளிர் தின வாழ்த்து செய்தி

## முதியவர் உயிரிழந்த விவகாரத்தில் ஏர் இந்தியா நிறுவனத்துக்கு ரூ 30 லட்சம் அபராதம்!

மும்பை விமான நிலையத்தில் சக்கர நாற்காலி வழங்க கால தாமதம் ஏற்பட்டதால், நடந்து சென்ற 80 வயது முதியவர் உயிரிழந்த விவகாரத்தில் ஏர் இந்தியா நிறுவனத்துக்கு ரூ 30 லட்சம் அபராதம் விதித்து விமான போக்குவரத்து ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவு!



The aviation safety regulator, the Directorate General of Civil Aviation (DGCA), has imposed a penalty of Rs.30 lakh on Air India for the death of an 80-year-old passenger from a cardiac arrest after a delay in providing him a wheelchair at the Mumbai airport earlier this month, but disability rights activists say a mere

# IMPORTANT JUDGEMENT OF THE HON'BLE SUPREME COURT OF INDIA



"Private Property is a Human Right" - Supreme Court of India, 2020

The Verdict:

The bench, made up of Justice Indu Malhotra and Justice Ajay Rastogi, observed that:

"The State cannot dispossess a citizen of his property except in accordance with the procedure established by law. The obligation to pay compensation, though not expressly included in Article 300 A, can be inferred in that Article. To forcibly dispossess a person of his private property, without following due process of law, would be violative of a human right, as also the Constitutional Right under Article 300 A of the Constitution."

The Supreme Court further held that the State could not take plea of Adverse Possession since it had been in continuous possession of the property for more than 42 years and that the "State cannot be permitted to perfect its title over the land by invoking the doctrine of adverse possession to grab the property of its own citizens, as has been done in the present case."

After considering the facts and circumstances of the case, the Supreme Court directed the state of Himachal Pradesh to pay the compensation along with statutory benefits, including solatium and interest, within eight weeks of the decision.

## வேலூர் அண்ணாமலையார் ரெசிடென்சில் முப்பெரும் விழா நடைபெற்றது

வேலூர் மாவட்டம் அகில இந்திய வழக்கறிஞர் கூட்டமைப்பு வடக்கு மண்டல மாநாடு, **AIAF 11** ம் ஆண்டு துவக்க விழா, மற்றும் சேவை ரத்னா விருது வழங்கும் விழா **Aav.Dr.T.K.**சத்தியசீலன் அகில இந்திய வழக்கறிஞர் கூட்டமைப்பு தலைவர் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளர்களாக சென்னை உயர்நீதி மன்ற நீதியரசர் **S.K.**கிருஷ்ணன், தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி பார் கவுன்சில் மெம்பர் மற்றும் பார்மர் சேர்மன் Adv. D.செல்வம், பார்மர் நீதிபதி **Amb. Dr. J.** ஹரிதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். மேலும் தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளில் இருந்து வந்த சுமார் 72 சமூக ஆர்வலர்களுக்கு சேவை செம்மல் 2024 விருது வழங்கப்பட்டது பின்னர் அனைவருக்கும் அறுசுவை விருந்து அளிக்கப்பட்டது

போளூர் செய்தியாளர் **M.** ஞானவேல்

# வரலாற்று சுவடு



1945–ஆம் ஆண்டு நடைபெற்ற உலகப்போரில் அமெரிக்கா – ஜப்பான் மீது குண்டு வீச்சில் தப்பிய சிறுவன் – தன் தாய் – தந்தை – உறவினர்களை இழந்து கட்டிட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்த தன்னுடைய தம்பியை சுடுகாட்டில் தகனம் செய்ய தன்னுடைய முதுகில் கட்டிக் கொண்டு நின்றான். இதனைக்கவனித்த இராணுவ வீரர் முதுகில் கட்டியுள்ள சுமையை எவ்வளவு நேரம் தாங்கிக் கொண்டு இருப்பாய் போசாமல் கீழே இறக்கி வைக்க கேட்டுக் கொண்டார். அதற்கு அந்த சிறுவன் "**அவன் கனமாக இல்லை, அவன் எனது சகோதரன்**" என்றான். அதுவே ஜப்பான் நாட்டினரின் சகோதர உறவின் அடையாளம்.

# தமிழ்நாடு அவசர உதவி எண்கள்

CORONA ( COVID 19 ) HELPLINE : 011-23978046 OR 1075

TAMIL NADU COVID 19 HELPLINE : 044-29510500 , 25615025 , 28593990

Centralized Helpline Number : 112

TAMIL NADU RAINS & FLOOD HELPLINE : 1070 OR WHATSAPP : 9445869848

NDRF Helpline Number : +91-9711077372

NDMA : 1078 OR 011-26701728

POLICE 100 OR 112

FIRE 101

AMBULANCE 102 OR 108

Coastal Security Helpline 1093

TRAFFIC POLICE 103

WOMEN HELPLINE 1091

CHILD LINE 1098

RAILWAY POLICE HELPLINE 9962500500 OR 1512

DISASTER HELPLINE 1070 OR 1077

GAS LEAKAGE 1716 , OR 011-1906

ANTI RAGGING COMPLAIN 18001805522

RAILWAY PROTECTION FORCE 1322

STUDENT AND EXAM HELPLINE 14417

RATION CARD HELPLINE 1967 1800-425-5901

TOURIST HELPLINE NUMBERS

Railway Enquiry 139

Tourist Enquiry 1913

Tourism Office ( Govt. of Tamil Nadu ) 25368538

Tourism Office ( Govt. of India ) 28460285

IMPORTANT NUMBERS :

NATURAL DISASTER : 1078 , 1077 , 1070 ,011- 26701728

CHENNAI CORPORATION COMPLAINí : 1913

DEPRESSION AND SUICIDE PREVENTION : 104 , 8526565656

TAMILNADU STATE DISASTER MANAGEMENT AUTHORITY : 9445869848

Blood Bank Information Service : 1910

# லஞ்ச ஒழிப்புப் புகார் அளிப்பது எப்படி ?

**ஓர் விழிப்புணர்வு அறிக்கை!**

1. ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் செயல்படும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு போலீஸார், (லஞ்ச ஒழிப்புத்துறை), அந்தந்த மாவட்டத்தின் எஸ்.பி. கட்டுப்பாட்டிலோ, அல்லது கலெக்டரின் கட்டுப்பாட்டிலோ கிடையாது. லஞ்ச ஒழிப்பு துறை அமைப்பானது, முற்றிலும், சென்னையில் தலைமைச்செயலகத்தில் இயங்கி வரும் chief secretary அந்தஸ்த்தில் உள்ள vigilance commissioner- அவர்களின் கட்டுப்பாட்டிலும், சென்னை ஆலந்தூரில் உள்ள gp அல்லது addl.dgp அந்தஸ்த்தில் உள்ள,ஒரு மூத்த ips அதிகாரியின் தலைமையில் இயங்கிவரும், vac என்றழைக்கப்படும் "directorate of vigilance and anti-corruption" என்ற இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டிலும் மட்டும்தான் செயல்படுகின்றனர். இன்னும் சொல்லப்போனால், மேற்சொன்ன மாவட்ட அதிகாரிகளின் செயல் பாடுகளையே கண்காணித்து, தவறு இருப்பின் நடவடிக்கை எடுக்க கடமைப்பட்டவர்கள்.

2) லஞ்ச ஒழிப்புச்சட்டம்–என்று அழைக்கப்படும் prevention of corruption act 1988– பிரிவு–2 பிரகாரம், அரசுப்பணியில் உள்ள அரசு ஊழியர்கள் மட்டுமின்றி, மக்களால் பொதுப்பணிக்கென தேர்ந்தெடுக்கப்படும், பஞ்சாயத்துப் போர்டு தலைவர், வார்டு உறுப்பினர்கள், நகரம், மாவட்டம் மற்றும் முனிசிபல் கவுன்சிலர்கள், சேர்மேன் மற்றும் அரசு நிர்வாகத்தில் உள்ள அனைத்து மக்கள் பிரதிநிதிகளும்- public servants" என்ற வரையரறைக்குட்பட்டதால், கடைநிலையில் உள்ள ஒரு வி.எ.ஓ.–வை எப்படி நூறுக்கும், இருநூறுக்கும், அந்தச்சட்டத்தின் கீழ், எளிதில் பொறி வைத்துப் பிடிக்கிறார்களோ, அதேபோல் பொறிவைப்பு நடவடிக்கைக்கு உட்பட்டவர்கள்தான். சமீபத்தில், திருச்சி, நாகப்பட்டினம் மற்றும் பல மாவட்டங்களில், பஞ்சாயத்து போர்டு தலைவர்களை கூட லஞ்ச ஒழிப்பு போலீஸார் பொறி வைத்து பிடித்துள்ளார்கள்.

3) லஞ்சத்தில் நான்கு வகைகள் உண்டு. அவை பின்வருமாறு:

4) emanding bribe from any individual, either to do any official act, or to do any service or disservice to any one

5) mega level-organised corruption, by colluding with each other, viz. the whole team of officials right from bottom to top, the contractors and the middle men, would be colluded with each other. in this type of corruption, the public/govt money alone will be siphone

6) minor level-organised corruption, wherein the enforcing officials in the field and the organised criminals in the same area, would collude with each other for sharing the ill-gotten money.

7) xample- the corrupt officials would collude with the prohibition offenders, gamblers, brothel-house-runners, smugglers and other anti social elements in their jurisdictions for ill-gotten money)

8) petty corruption ( mostly practiced by corruptive traffic police men with the road side vendors and the last grade servants, almost in all the government offices, wherein only a meager amount of rupees, viz. rs- 100/ to 500/ are involved)

9) இந்த நான்கு வகையில், 1–வது வகையான லஞ்சத்தில் ஈடுபடுபவர்கள்தான் அடிக்கடி "பொறி வைப்பு" நடவடிக்கையில் சிக்குவார்கள். ஏனெனில், இதில் பாதிக்கப்பட்ட நபர் motivate-ஆகி புகார் அளிக்க தயாராக இருப்பார்.

2–வது வகையான லஞ்சம் வொயிட்காலர் (white color) லஞ்சம் எனப்படும். இந்த வகை லஞ்சத்தில் இழப்புக் குண்டாவது அரசாங்கம் தான். இழப்புக் குண்டாகும் அரசுப்பணத்தின் அளவு கற்பனைக்கு எட்டாததாக இருக்கும்.

எப்போதாவது சில நேரங்களில் அத்திபூத்தார் போல சில நேர்மையான அதிகாரிகளின் கண்களில் படும்போது மட்டும் திடீரென வெடித்து பரபரப்பாகும்.இந்த வகையான லஞ்சத்தால் எற்படும் பாதிப்பு கேன்ஸர் போன்றது. ஏனெனில், இதன் பாதிப்பு, கண்களுக்கு உடனடியாகத் தெரியாது,ஆனால், நாளடவில் ஏற்படும் பாதிப்பு மரணத்திற்கு ஒப்பானது.

3–வது வகையான லஞ்சத்தில்தான், கண்ணுக்கு எதிரேயே தெரியும். கள்ளச்சாரயம், சூதாட்டங்கள், ப்ராத்தல்– ஹவுஸ்கள், கலப்படங்கள், கட்டப் பஞ்சாயத்துக்கள்.

4–வது வகை லஞ்சம் பொதுமக்களுக்கு அன்றாடத் தொல்லைகள் தரும் வகையைச் சேர்ந்தது. 100ரூபாய்க்கும், 200 ரூபாய்க்கும் லஞ்சத்தில் ஈடுபடும் ஒரு கடை நிலை ஊழியரை தண்டிப்பது பரிதாபத்துக்கு உரியதாக தெரிந்தாலும், பொது இடங்களில் அச்செயல் மிகுந்த தொல்லைக்குரியதாகவே தெரியும்.

4–வது வகையில் சொல்லப்பட்டுள்ள Petty corruption என்பது பிச்சைக்காரார்கள் அதிகார தொனியில், பிச்சை எடுப்பது போலத்தான்.

5) அதே போல, லஞ்ச ஒழிப்பு நடவடிக்கையிலும்,மூன்று வகைகள் உண்டு.

1) trap case. (பொறி வைத்துப்பிடித்தல்)

2) regular case. (fir will be registered later based on the outcome of (a)detailed enquiry (b) preliminary enquiry(c) surprise check (d) even sometimes from vigilance reports.

3)regular case for d.p assets ( fir will be registered by dvac for the possession of disproportionate assets by the public servants.fir will be registered ,only after the vigilance commision and the dvac satisfied from the preliminary

enquiry or detailed enquiry that there is a case of prima facie of d.p.assets against the corruptive public servants. )

## எப்படி புகார் அளிப்பது:

6. இதில், லஞ்சம்கொடுத்தால்தான் வாயையே தொறப்பேன் என்று செயல் படும் சில corruptive officials மீது பொறிவைப்பு நடவடிக்கை வேண்டுவோர், அந்தந்த மாவட்ட தலைநகரில் ஒரு டி.எஸ்.பி தலைமையில் செயல் படும் லஞ்ச ஒழிப்பு பிரிவிற்கு நேரில் சென்று விபரம் கூறினால் போதும். பொறி வைத்து முடித்து, அந்த லஞ்ச அதிகாரிகளை கைதுசெய்யும் வரை அவர்களே உடனிருந்து செயல் படுவார்கள்.

பொதுமக்கள் தாங்கள் அவ்வாறு புகார் அளித்தால், 'நம் அரசு வேலையை முடித்துக் கொடுக்க மாட்டார்களே என்று கவலைப்பட வேண்டாம். பொறிவைப்பு நடவடிக்கை முடிந்ததும், அந்த வேலையை செய்து கொடுக்க, லஞ்ச ஒழிப்பு போலீஸாரே உரிய உயர் அதிகாரிகளை தொடர்பு கொண்டு,ஆவன செய்து கொடுக்க வேண்டும் என்று ஏற்கனவே அரசு உத்தரவிட்டுள்ளது.

7) 2, மற்றும் 3-வது வகையான லஞ்சம் தொடர்பான குற்றங்களுக்கு, பெரும்பாலும் பொறிவைப்பு நடவடிக்கைகான புகார்கள் வராது. காரணம், இது ஒரு collusive corruption. இவற்றை whistle-blower கள்தான் வெளிக்கொண்டுவரவேண்டும்.

இந்த வகையான collusive natured corruption-தொடர்பான குற்றங்களுக்குஎதிராக, fir போடுவதற்கு அடிப்படையாக தேவைப்படுகின்ற etailled enquiry/ preliminary enquiry/ surprise check செய்வதற்கு தேவையான தகவல்கள், லஞ்சப்பணம் transaction நடைபேறும் இடம், illegal assets பற்றிய செய்திகள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செய்த தரமற்ற அரசுப் பணிகள் (sub-standard works) பற்றிய தகவல்கள், மாமூல் நடைபெறும் விதம், அவை நடைபெறும் இடம் மற்றும் அதில் colludegþ¥^e corrupt officials மற்றும் வாங்கிக் கொடுக்கும் middle men மற்றும் சமூகவிரோத குற்றங்கள் செய்யும் organised offenders பற்றிய விபரங்களை, அனுப்புபவர் பெயர் முகவரி எதுவும் குறிப்பிடாமல், புகாராகவோ அல்லது இமெயில் மூலமகவோ,சென்னையில் இதனடியில் கூறி உள்ள அதிகாரிகளுக்கு அனுப்பினால் நிச்சயம் அது உரிய நடவடிக்கைகு வரும்.

8. ஆனால், இந்த வகையான வழக்குகளில், வழக்கின் தன்மையைப் பொறுத்துத்தான், கைது போன்ற நடவடிக்கைகள் செய்வார்கள். இதில், பொறி வைப்பு நடவடிக்கை போல உடனடி கைது இல்லா விட்டாலும், சம்பந்தப்பட்ட லஞ்சப்பேர்வழி காலப்போக்கில் சட்னியாகி விடுவார்.

9. விஜிலன்ஸ் கமிஷனர் மற்றும் vac- முகவரிகள் பொதுமக்கள் பயன் பாட்டுக்காக கொடுக்கப்பட்டுள்ளது.

1) **VIGILANCE COMMISSIONER**

PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS
DEPARTMENT SECRETARIAT, CHENNAI 600 009
PBX NO. 044-25665566

EMAIL: PARSEC@TN.GOV.IN

(2)**THE DIRECTOR,**

VIGILANCE AND ANTI-CORRUPTION,

293,MKN ROAD, COLLECTORS NAGAR, ALANDUR,
CHENNAI, TAMIL NADU-600016.

CHENNAI – 600 028.

phone-044-22321090/22321085/22310989/ 22342142
e-mail: dvac@nic.in

10. மத்திய அரசுப்பணியில் உள்ளவர்கள் மீது லஞ்சப்புகார்களை அளிக்கும் பட்சத்தில், மாநில அரசுகட்டுப்பட்டில் உள்ள லஞ்ச ஒழிப்பு போலீஸார் நடவடிக்கை எடுக்க முன்வர மாட்டார்கள்.

அப்புகார்களை கீழே அளிக்கப்பட்டுள்ள cbi -anti-corruption பிரிவிற்கு தொலைபேசி மூலம் தகவல் அளித்தாலே போதும். அவர்களே உங்கள் இடத்திற்கு, உங்களைத்தேடி வந்து புகாரைப்பெற்று சம்பந்தப்பட்ட corrupt officer-மீது பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

**CHENNAI ZONE**

**JOINT DIRECTOR AND HEAD OF ZONE,**

**III FLOOR, E.V.K.,**
**SAMPATH BUILDING,**
**COLLEGE ROAD,**
**CHENNAI 600006.**

**044-28232756 (DIRECT),**

**044-28272358(GENERAL),**

**044-28232755 (FAX)**

# மஞ்சுமல் பாய்ஸ் விமர்சனம்.

## குணா குகையை வைத்து இப்படியொரு படமா?

நடிகர்கள்: சௌபின் சாஹிர், ஸ்ரீநாத் பாஸி

இசை: சுஷின் ஷியாம்

நேரம்: 2 மணி நேரம் 15 நிமிடங்கள்

இயக்கம்: சிதம்பரம்

**சென்னை:** இயக்குநர் சிதம்பரம் இயக்கத்தில் சௌபின் சாஹிர், ஸ்ரீநாத் பாஸி உள்ளிட்ட பலர் நடித்துள்ள மஞ்சும்மல் பாய்ஸ் படம் மலையாள ரசிகர்களை மட்டுமின்றி தமிழ் சினிமா உள்ளிட்ட பான் இந்தியா ரசிகர்களையும் கவர்ந்துள்ளது. கோலிவுட்டில் வாரம் 4 மொக்கைப் படங்கள் இந்த ஆண்டு வெளியாகி வரும் நிலையில், கேரளாவில் ஒவ்வொரு வாரமும் ஒரு தரமான சம்பவத்தை அந்த திரையுலகம் கொடுத்து வருவது ரசிகர்களுக்கு கொண்டாட்டத்தையும் தியேட்டருக்கு உடனே சென்று படத்தை பார்த்தே தீர வேண்டும் என தூண்ட வைக்கிறது.




இந்த ஆண்டு தமிழில் வெளியான கேப்டன் மில்லர், அயலான், சிங்கப்பூர் சலூன், லால் சலாம், இந்த வாரம் வெளியான வித்தைக்காரன், பாம்பாட்டம் படங்கள் எல்லாம் ரசிகர்களை பாடாய் படுத்தி வரும் நிலையில், பிரேமலு, பிரம்மயுகம் படங்களை தொடர்ந்து அடுத்த 100 கோடி வசூல் செய்யும் மலையாள படமாக மஞ்சுமல் பாய்ஸ் மாறியிருக்கிறது. அதன் முழுமையான விமர்சனத்தை இங்கே பார்க்கலாம் வாங்க.

**குணா குகை தான் கதை** : சந்தான பாரதி இயக்கத்தில் 1991ம் ஆண்டு வெளியான குணா படத்தில் கொடைக்கானலில் ஒரு குகையில் படப்பிடிப்பை கமல்ஹாசன் எடுத்திருப்பார். 'கண்மணி அன்போடு' பாடலும் அந்த பாடலில் வரும் 'மனிதர் உணர்ந்து கொள்ள இது மனித காதல் அல்ல' என்கிற வசனமும் அந்த பாடலை எப்போது பார்த்தாலும் மெய்சிலிர்க்க வைத்து விடும். அந்த குணா குகைக்கு செல்லும் நண்பர்கள் அங்கே சிக்கிக் கொண்டு தப்பிக்கும் சர்வைவர் த்ரில்லர் கதையாகவே இயக்குநர் சிதம்பரம் இந்த மஞ்சுமல் பாய்ஸ் படத்தை இயக்கியிருக்கிறார். 2006ம் ஆண்டு கொடைக்கானலில் நடந்த உண்மை கதையை பின்னணியாக வைத்து இந்த படம் உருவாகி இருக்கிறது.

கோவாவுக்கு பிளான் போட்டு கொடைக்கானலுக்கு: எல்லா நட்பு க்ரூப்பிலும் நண்பர்கள் கோவாவுக்கு பிளான் போடுவதும், கடைசியில் மெரினா பீச்சுக்கு கூட சிலர் வராமல் போவதுமாகத்தான் இருக்கும். அதே போல ஒரு கதையாகவே இந்த படம் உருவாகி இருக்கிறது. கேரளவில் எர்ணாகுளம் அருகேயுள்ள மஞ்சும்மல்லைச் சேர்ந்த நண்பர்கள் சிலர் 'மஞ்சும்மல் பாய்ஸ்' என்ற பெயரில் கிளப் ஒன்றை அமைத்து ஜாலியாக டூர் செல்ல திட்டமிடு–கின்றனர். முதலில் கோவாவுக்கு செல்ல பிளான் போடும் அவர்கள் பட்ஜெட் காரணமாக கடைசியில் கொடைக்கானலுக்கு செல்கின்றனர்

**பிளஸ்:** கொடைக்கானலுக்கு செல்லும் அனைவரையும் குணா குகை என ஒரு இடத்துக்கு அழைத்துச் செல்வது வழக்கம். ஆனால், நாம் பார்ப்பது குணா குகையே அல்ல என்பது அனைவருக்கும் தெரிந்தாலும், தடை செய்யப்பட்ட அந்த பகுதிக்குள் யாரும் போக மாட்டார்கள். அந்த தடை செய்யப்பட்ட ரிஸ்க்கான பகுதிக்குள் சென்று ஒரிஜினல் குணா குகையை பார்க்க வேண்டும் என விபரீத முடிவை எடுத்துச் செல்லும் நண்பர்கள் 40வது நிமிடத்தில் அந்த இடத்தில் சிக்கிக் கொள்ள அந்த சீன் முதல் இறுதி காட்சி வரை தியேட்டரில் படம் அனல் பறக்கிறது. படத்தில் எது ஒரிஜினல் குகை, எது செட் என்றே தெரியாத அளவுக்கு கலை இயக்குநர் கலக்கி இருக்கிறார். புரொடக்ஷனும் சரியான பட்ஜெட்டை கச்சிதமாக ஒதுக்கி உள்ளனர். அதன் பலனைத் தான் தற்போது சர்வதேச அளவில் அறுவடை செய்து வருகின்றனர். குணா படத்தில் இடம்பெற்ற 'மனிதர் உணர்ந்து கொள்ள இது மனித காதல் அல்ல' என்கிற காட்சியும் பக்காவாக இந்த படத்தில் இயக்குநர் பொருத்தி மாஸ் காட்டுகிறார்.

**மைனஸ்:** வழக்கமான சர்வைவர் படம் தானே என நினைக்கும் ரசிகர்களுக்கு இந்த படம் பெரிதாக கவனத்தை ஈர்க்குமா என்பது சந்தேகம் தான். ஆனால், ஏகப்பட்ட நாஸ்டால்ஜிக்கான விஷயங்களையும் படத்திற்கு போடப்பட்டுள்ள உழைப்பும் மெனக்கெடலும் நிச்சயம் தியேட்டரில் சென்று பார்த்தால் தான் பிரம்மிப்பை ஏற்படுத்தும். படம் ஆரம்பித்து பொறுமையாக மலையாள படங்களுக்கே உரித்தான பாணியில் ஸ்லோவாக செல்வது சில இடங்களை கடுப்பை ஏற்படுத்தலாம். ஆனால், படம் ஒரு இடத்தில் ஸ்பீடு காட்டத் தொடங்கியதும் கடைசி வரை பதை பதைப்புக்கு பஞ்சமே இருக்காது. ஓடிடியில் வரும் வரை வெயிட் பண்ணாமல் உடனே தியேட்டரில் பார்க்க ஒரு வொர்த்தான படம் தான் இந்த மஞ்சுமல் பாய்ஸ்.

# செய்தித் துளிகள்...

**விருதுநகர்**: விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் தேசிய வங்கியில் போலி நகைகளை அடகு வைத்து மோசடி – நகை மதிப்பீட்டாளர் உள்பட 2 பேர் கைது

**சென்னை** : எழும்பூர் காவல் மருத்துவமனையில் ஊர்காவல் படையினருக்கு சிகிச்சை – கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் தொடங்கி வைத்தார்.

**வடபழனி திருக்கோயில்** : மாண்புமிகு நீதியரசர் திரு.எஸ்.எம்.சுப்ரமணியம் அவர்கள் குடும்பத்துடன் வருகை தந்து கட்டண தரிசனத்திற்காக ரூ.50 டிக்கெட் மூன்று கேட்டு வாங்கினார், ஆனால் அதில் இரண்டு 50 ரூபாய் டிக்கெட்டுகளும் 1 5 ரூபாய் டிக்கெட்டும் இருந்தது, நீதியரசர் அதனை அறிந்து அறநிலையத் துறை அதிகாரிகளுக்கு அழைத்து இது போல் இனி நடக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள் என அறிவுரை கூறினார்.

**தேர்தல் ஆணையம்** : வருகின்ற 2024 நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிபவர்கள் சாதி, மத உணர்வுகள் புண்படும்படி பிரச்சாரம் செய்ய கூடாது என எச்சரிக்கை.


**நாமக்கல் மாவட்டம்** : மோகனூர் வட்டம், வலையப்பட்டி, புதுப்பட்டி, சிப்காட் திட்டம் கைவிட பல்வேறு போராட்டங்கள்

**K.MAHESHWARI**
Proprietrix
sairamenterprises508@gmail.com

SRE

73974 34540
91760 29729

# SAI RAM ENTERPRISES



No: 135/C-, Poonamallee High Road, Velappanchavadi, Chennai-600077

**WE MAKE THE OUTLOOK SAFE & WONDERFUL**



ஜெய் ஸ்ரீராம் ஓம் அகத்தீசாய நமஹ : ஸ்ரீ அண்ணமார் துணை

சிற்ப சாஸ்திர முறைப்படி அனைத்து வகையான ஆலய சுவாமி சிற்பங்கள், குதிரைகள், முனியப்ப சுவாமிகள், அய்யனார், கருப்பசாமி, கோபுர சிற்பங்கள், கோபுரங்கள், ராஜ கோபுரங்கள் மற்றும் கோவில் அஸ்திவாரம் முதல் கலசம் வரை அனைத்து உயரங்களிலும் வேலைபாடுகளும் சிறப்பான முறையில் குறைந்த தொகையில் செய்து தரப்படும். பஞ்சவர்ண வேலைபாடுகள் சிறப்பான முறையில் செய்து தரப்படும்.

சிமெண்ட், கருங்கல், மெழுகு பாசனங்கள், உலோகம் ஆகியவற்றில் தேவைக்கேற்வாறு சிறப்பாக அனைத்து உயரங்களிலும் செய்து தரப்படும்.

# ஸ்ரீ செல்லாண்டி அம்மன் சிற்பக் கலைக்கூடம்

சத்தியமங்கலம் மெயின்ரோடு, பால் சொசைட்டி அருகில்,

கரட்டடிபாளையம் அஞ்சல், கோபி – 638453, ஈரோடு மாவட்டம்

Temple Architecture & Sculpture

பாரம்பரிய சிற்பி. **K.அருண்**

தொடர்புக்கு : **97918 79732, 94899 92230**

## விளம்பரக்கட்டண விபரம்

| | |
|---|---|
| Yearly Subscription | - Rs.100/- |
| 3 Years Subscription | - Rs.250/- |
| 5 Years Subscription | - Rs.400/- |

| | | | |
|---|---|---|---|
| Front Inner | - Rs.20,000 | Black & White Full Page | - Rs.6,000 |
| Back Inner | - Rs.20,000 | Black & White ½ Page | - Rs.2,500 |
| Outer | - Rs.25,000 | Black & White ¼ Page | - Rs.1,500 |

பெண்களின் படைப்புக்களான கவிதைகள், கட்டுரைகள், சமையல் மற்றும் அழகுக் குறிப்புகள் விளம்பரமாக அனுப்பலாம்.

**பொதுமக்கள் & வாசகர்கள் கவனத்திற்கு :**

பெண் உரிமை சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள், குடும்ப நல நீதிமன்ற வழக்குகள் மற்றும் இலவச ஆலோசனை தொடர்புக்கு :

**T.K.அசோக்குமார்** B.A., B.L.,
196, LAW CHAMBER, High Court, Chennai - 104. **Cell : 72 00 00 14 14**

# காசி ஆன்மீக யாத்திரை

## காசியில் முப்பெரும் விழா


## 108 சித்தர்கள் கூட்டமைப்பு நடத்தும்
## காசி மகேஸ்வரர் பூஜை சான்றிதழ் வழங்கும் விழா
## காசியில் அன்னம் அளிப்பு



புறப்படும் நாள் :..........................................

புறப்படும் இடம் : மத்திய இரயில் நிலையம், சென்னை

பயண நாட்கள் : 7



## பயண விபரம்

**நாள் 1 :** சென்னையில் இருந்து இரயிலில் புறப்படுதல்

**நாள் 2 :** இரவு காசி அடைந்து தங்குதல்

**நாள் 3 :** காசி சுற்றிப்பார்த்தல், ஸ்ரீகாசி விஸ்வநாதர் ஆலயம், அன்னபூரணி அம்மன் தரிசனம், காசி விசாலாட்சி கோயில் தரிசனம், காலபைரவர் கோயில், சங்கட் மோட்சன் ஹனுமான் மந்திர், துர்கா தேவி ஆலயம், துளசி மானஸ் மந்திர் மற்றும் பல மாலை கங்கா ஆரத்தி காணுதல் இரவு காசியில் தங்குதல்.

**நாள் 4:** காலை 108 சித்தர்கள் கூட்டமைப்பு நடத்தும் காசி மகேஸ்வவர் பூஜை மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா. இரவு காசியிலிருந்து சென்னைக்கு இரயிலில் புறப்படுதல்

**நாள் 5 :** இரயில் பயணம்

**நாள் 6:** காலை அனைவரும் நலமுடன் சென்னை வந்து சேருதல்

---

**பயணக்கட்டணம் : ரூ.7000 மட்டுமே**

**பயணக்கட்டணத்தில் உள்ளடக்கம் :** இரயில் கட்டணம், தங்குமிடக் கட்டணம், சைவ உணவு (இரயில் பயணங்களில் நீங்கலாக) இரயில் நிலையம் – தங்குமிடம் செல்லும் வாகனக் கட்டணம்

**தொடர்புக்கு : 98409 78262 / 94440 12235**

# மதுரை சித்திரை திருவிழா – 2024



- 12 ஏப்ரல் – கொடியேற்றம்
- 19 ஏப்ரல் – பட்டாபிஷேகம்
- 20 ஏப்ரல் – மீனாட்சி அம்மன் திக்விஜயம்
- 21 ஏப்ரல் – மீனாட்சி அம்மன் சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம்
- 22 ஏப்ரல் – திருத்தேரோட்டம்
- 22 ஏப்ரல் – எதிர்சேவை
- 23 ஏப்ரல் – கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளல்